## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 8-10 - நெடுமாற்கடிமை[1]
## (அநந்யார்ஹசேஷத்வத்துக்கு எல்லை நிலமான பாகவத சேஷத்வம் தமக்கு விளைந்ததை ஆழ்வார் பேசுதல்)

3546 * நெடுமாற்கடிமை செய்வேன் போல் * அவனைக் கருத வஞ்சித்து *
தடுமாற்றற்ற தீக்கதிகள் * முற்றும் தவிர்ந்த சதிர் நினைந்தால் **
கொடுமா வினையேன் அவன் அடியார் அடியே * கூடும் இது அல்லால் *
விடுமாறென்பதென்? அந்தோ! * வியன் மூவுலகு பெறினுமே 1

3547 வியன் மூவுலகு பெறினும் போய்த் * தானே தானே ஆனாலும் *
புயல் மேகம் போல் திருமேனி அம்மான் * புனை பூங்கழல் அடிக் கீழ் **
சயமே அடிமை தலை நின்றார் * திருத்தாள் வணங்கி * இம்மையே
பயனே இன்பம் யான் பெற்றது * உறுமோ பாவியேனுக்கே 2

3548 உறுமோ பாவியேனுக்கு? * இவ்வுலகம் மூன்றும் உடன் நிறைய *
சிறுமா மேனி நிமிர்த்த * என் செந்தாமரைக் கண் திருக்குறளன் **
நறுமா விரை நாள் மலரடிக் கீழ்ப் * புகுதல் அன்றி அவன் அடியார் *
சிறுமா மனிசராய் என்னை ஆண்டார் * இங்கே திரியவே 3

3549 இங்கே திரிந்தேற்கு இழுக்குற்றென்? * இருமாநிலம் முன் உண்டுமிழ்ந்த *
செங்கோலத்த பவள வாய்ச் * செந்தாமரைக் கண் என் அம்மான் **
பொங்கேழ் புகழ்கள் வாயவாய்ப் * புலன் கொள் வடிவு என் மனத்ததாய் *
அங்கேய் மலர்கள் கையவாய் * வழிபட்டோட அருளிலே 4

3550 வழிபட்டோட அருள் பெற்று * மாயன் கோல மலரடிக் கீழ் *
சுழிபட்டோடும் சுடர்ச் சோதி வெள்ளத்து * இன்புற்றிருந்தாலும் **
இழிபட்டோடும் உடலினில் பிறந்து * தன் சீர் யான் கற்று *
மொழிபட்டோடும் கவி அமுதம் * நுகர்ச்சி உறுமோ? முழுதுமே 5

3551 நுகர்ச்சி உறுமோ? மூவுலகின் * வீடு பேறு தன் கேழில் *
புகர்ச் செம்முகத்த களிறட்ட * பொன் ஆழிக் கை என் அம்மான் **
நிகர்ச் செம்பங்கி எரி விழிகள் * நீண்ட அசுரர் உயிர் எல்லாம் *
தகர்த்துண்டு உழலும் புட்பாகன் * பெரிய தனி மாப் புகழே? 6

3552 தனிமாப் புகழே எஞ்ஞான்றும் * நிற்கும்படியாத் தான் தோன்றி *
முனிமாப் பிரம முதல் வித்தாய் * உலகம் மூன்றும் முளைப்பித்த **
தனிமாத் தெய்வத் தளிரடிக் கீழ்ப் * புகுதல் அன்றி அவன் அடியார் *
நனிமாக் கலவி இன்பமே * நாளும் வாய்க்க நங்கட்கே 7

3553 நாளும் வாய்க்க நங்கட்கு * நளிர் நீர்க் கடலைப் படைத்து * தன்

[1] இது கோவில் திருவாய்மொழி

தாளும் தோளும் முடிகளும் * சமனிலாத பல பரப்பி **
நீளும் படர் பூங்கற்பகக் காவும் * நிறை பன்னாயிற்றின் *
கோளுமுடைய மணிமலை போல் * கிடந்தான் தமர்கள் கூட்டமே 8

3554 தமர்கள் கூட்ட வல்வினையை * நாசம் செய்யும் சதிர்[2] மூர்த்தி *
அமர்கொள் ஆழி சங்கு வாள் * வில் தண்டாதி பல் படையன் **
குமரன் கோல ஐங்கணை வேள் தாதை * கோதில் அடியார் தம் *
தமர்கள் தமர்கள் தமர்களாம் * சதிரே வாய்க்க தமியேற்கே 9

3555 வாய்க்க தமியேற்கு ஊழி தோறூழி * ஊழி மாகாயாம் *
பூக்கொள் மேனி நான்கு தோள் * பொன் ஆழிக் கை என் அம்மான் **
நீக்கமில்லா அடியார் தம் * அடியார் அடியார் அடியார் எங்
கோக்கள் * அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் * நல்ல கோட்பாடே 10

3556 * நல்ல கோட்பாட்டுலகங்கள் * மூன்றின் உள்ளும் தான் நிறைந்த *
அல்லிக் கமலக் கண்ணனை * அந்தண் குருகூர்ச் சடகோபன் **
சொல்லப்பட்ட ஆயிரத்துள் * இவையும் பத்தும் வல்லார்கள் *
நல்ல பதத்தால் மனை வாழ்வர் * கொண்ட பெண்டிர் மக்களே 11

**அடிவரவு:** நெடுமால் வியன் உறுமோ இங்கே வழி நுகர்ச்சி தனிமா
நாளும் தமர்கள் வாய்க்க நல்ல கொண்ட

[2] சது